*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 28/2023 – P.W. 4 (LW4)***

| | |
|---|---|
| *Name* | நாடிமுத்து |
| *Father/Husband's Name* | சின்னையன் |
| *Village* | கர்ணாவூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *74* |

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 21.10.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஊர்க்காரர்கள்தான். அவர்களுக்குள் என்ன பிரச்சினை என்று எனக்கு தெரியாது. நான் வெளியில் போய்விட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும், கடந்த 15.07.2021 ம் தேதியன்று திருமங்குட்டை என்ற இடத்தில் 100 நாள் வேலை நடந்தபோது அ.சா.2 மற்றும் அ.சா.3 ம் வேலை செய்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் தகாத வார்த்தைகள் சொல்லி திட்டி சைக்கிள் பம்ப்பால் தலையில் அடித்தார்கள் என்றும் அதனை தடுக்க வந்த அ.சா.1 னை இரும்பு கம்பியால் அடித்துக் காயப்படுத்தினார்கள்

என்றும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் அதனை நான் நேரிட்டு பார்த்தேன் என்றும் கூறியுள்ளேன் என்றால் - சரியல்ல.

2. தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிகளுக்கு சாதகமாகவும் பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 28/2023 – P.W.5 (LW6)***

| | |
|---|---|
| *Name* | ராஜேந்திரன் |
| *Father/Husband's Name* | ரெங்கையன் |
| *Village* | கர்ணாவூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 64 |

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 21.10.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பிரசாத் மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள்தான். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சினை என்று எனக்கு தெரியாது.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் எனது கையொப்பம் எதுவும் இல்லை. போலிசார் விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும், கடந்த 17.07.2021 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் நான் வேலைக்கு சென்றுக்கொண்டிருந்தபோது 15.07.2021 ம் தேதியன்று அ.சா.1,2,3 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையில் நடந்த தகராறு தொடர்பாக விசாரித்த போலிசார் சம்பவ

இடம் வந்து என் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றும் இதற்கு சாட்சியாக நான் இருந்து கையொப்பம் செய்துக்கொடுத்தேன் என்றும் கூறியுள்ளேன் என்றால் - சரியல்ல.

2. தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிகளுக்கு சாதகமாகவும் பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

M SURESHKARTHIK

Digitally signed by M SURESHKARTHIK
Date: 2024.10.21 17:55:49 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.28/2023 – P.W.6 (LW5)***

| | |
|---|---|
| *Name* | சண்முகசுந்தரம் |
| *Father/Husband's Name* | வெங்கடாச்சலம் |
| *Village* | கர்ணாவூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 41 |

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 21.10.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எல்க்ட்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2, 3 மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது ஊர்க்காரர்கள்.

2. கடந்த 15.07.2021ம் தேதியன்று காலை 10.30 மணியளவில் ராமமூர்த்தி என்பவர் வீட்டிற்கு எதிரே உள்ள திருமங்குட்டை என்ற இடத்தில் 100 நாள் வேலை நடந்துக்கொண்டிருந்தது. வாசுகியின் மருமகள் பொதுவாக பேசிக்கொண்டிருந்தார். அப்போது இராதாகிருஷ்ணனின் மனைவி சரிதா அவர்களை தான் திட்டுகிறார் என்று தவறாக நினைத்துக்கொண்டு வாசுகியின் மருமகளை கெட்ட வார்த்தை சொல்லி சரிதா திட்டினார். அப்போது ராமமூர்த்தி அந்த சண்டையை கேட்கபோனார். நான்தான் அவரை விலக்கிவிட்டு வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். சம்பவ இடத்திலிருந்து அப்போது சென்ற சரிதா மீண்டும் சம்பவ இடத்திற்கு வந்தார். சரிதாவுடன் வெளியூரை சேர்ந்த 3 நபர்களும் ராதாகிருஷ்ணனும் அங்கு வந்து ராதாகிருஷ்ணன் வாசுகியை காத்தடிக்கும் சைக்கிள் பம்ப்பால் தலையில் அடித்தார். வெளியூரிலிருந்து வந்த பசங்க கட்டையால் வாசுகியின் மருமகளையும் மகனான பிரசாந்த்தையும் முகத்திலும் அடித்தார்கள். நான் பார்க்கும்போது வாசுகியின்

தலையிலும் பிரசாந்த் முகத்திலும் மற்றும் அவரது மனைவியின் முகத்திலும் இரத்தம் வழிந்தது. வெளியூரிலிருந்து வந்த பசங்க ராதாகிருஷ்ணனின் உறவினர்கள் ஆவார்கள்.

3. போலிசார் வந்து சம்பவ இடத்தில் விசாரித்தபோது நான் பார்த்த சம்பவத்தினை போலிசாரிடம் கூறினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

M SURESHKARTHIK

Digitally signed by M SURESHKARTHIK
Date: 2024.10.21 17:55:56 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.